**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.83/2025** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | சிலம்பரசன் |
| Father’s /Husband Name | : | ராயப்பன் |
| Village | : | சேங்காலிபுரம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 40 |
| Occupation | : | மெக்கானிக் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 25th day of November 2025.

Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேங்காலிபுரம் மாதா கோவில் தெருவில் குடியிருந்து டூவீலர் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனது சொந்த வேலையாக குடவாசல் காவல் நிலையம் வழியாக சென்ற போது குடவாசல் போலீசார் என்னிடம் ஒரு தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை போலீசார் கேட்டதால் செய்து கொடுத்தேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. **புகார் மனுவில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் 2 வது சாட்சியாக பார்த்திபன் தற்போது துபாய் நாட்டில் வேலை செய்து வருகிறார். அவர் வருவதற்கு சுமார் 3 ஆண்டுகள் ஆகும்.

**அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரியை தெரியும் என்றும் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 15.06.2024 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் குடவாசல் சேங்காலிபுரம் சாலையில் நானும் பார்த்திபன் என்பவரும் இருந்த போது ஆஜர் எதிரி என்னை கத்தியை காட்டி மிரட்டி பணம் ரூ.500/-கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. அப்போது ஆஜர் எதிரி கையில் வைத்திருந்த கத்தியாலேயே உன்னை குத்தி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டி எனது பாக்கெட்டில் இருந்த ரூ.500/-பணத்தை பறித்து சென்றார் என்றால் சரியல்ல. நானும் பார்த்திபனும் ஆஜர் எதிரியை பிடிக்க முற்பட்ட போது எங்களிடமிருந்து தப்பித்து ஓடி விட்டார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அப்போது ஆஜர் எதிரி தனது கையில் வைத்திருந்த கத்தியை கீழே போட்டுவிட்டு ஓடினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியால் நான் பாதிக்கப்பட்டு அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி குடவாசல் காவல் நிலையத்தில் உண்மையாக புகார் மனு கொடுத்துவிட்டு தற்போது ஆஜர் எதிரியை இவ்வழக்கிலிருந்து தப்பிக்க வைக்க வேண்டும் என்பதற்காக ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும் இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் எதிரிக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.25 10:21:14 +05'30'

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.